காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

5-6-66

விலை 20 காசு

கேள்வி--பதில்!

ஒரிசாவில் பட்டினிச் சாவுகள் இல்லை என்று பிரதமர் இந்திரகாந்தி சொல்வதை நீங்கள் நம்புகிறீர்களா?

1967 பொதுத்தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதை பிரதமர் மறந்துவிட்டிருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்? ஐவருக்குந்தேவியான பாஞ்சாலி தன்னைப் பதிவிரதை என்று கூறிக்கொள்ளவில்லையா? பட்டினிச் சாவுகள் உண்மைதான் என்று அவர் ஒப்புக்கொண்டிருந்தால், மற்றொரு மேற்கு வங்காளம் அங்கே ஏற்பட்டு விடாதா? பட்டினியால் சாவோர் எல்லாம், தான் பட்டினி காரணமாகத்தான் செத்தேன் என்று எழுதிவைத்துக்கொண்டா சாகிறார்கள்? இல்லையே! அறிக்கையை எப்படி எழுதினால் என்ன? செத்தவர்கள் வந்து சாட்சி கூறப்போவதில்லையே!—மனச்சான்றுக்குப் பயந்து ஒப்புக்கொண்டால்கூட, தேர்தலில் இந்த நிலைமை பயன்படுத்தப் பட்டுவிடும் என்பதை அவர் அறியாமலிருக்க முடியாதே!

மலேசியாவுடன் சமரசப் பேச்சுக்கு தயார் என்று சுகர்ணோ அறிவித்திருக்கிறாரே! அவர் இன்னமும் பதவியில் இருக்கிறாரா, என்ன?

ஏறத்தாழ முடிபறிக்கப்பட்ட நிலைதான்! கன்றுக்குட்டியின் தோலுக்குள் வைக்கோலைத் திணித்து, பசுவின்முன் வைத்துவிட்டுப் பால்கறக்க முனைகிறார்களல்லவா, அதுபோலத்தான், சுகர்ணோவை வைத்திருக்கிறார் சுகார்த்தோ. அறிவிப்பும்கூட இதே தன்மையதுதான். ஆனால், சமரசநிலை ஏற்பட்டு, இந்தோனேஷியாவும் மலேசியாவும் குழப்பம் நீங்கி அமைதி பெற்றுவிட்டால், உலக விவகாரங்களில் ஒன்று பைசலானது என்று மகிழுங்கள்.

சீனா அணுகுண்டு வெடித்தது இந்தியாவைப் பயமுறுத்தத்தான் என்கிறார்கள் சிலர்; இந்தோனேஷியாவை பயமுறுத்த என்கிறார்கள் சிலர்; ரஷ்யாவுக்கு எதிராக என்கிறார்கள் சிலர்—எது உண்மை?

இந்தியாவை சீனா இவ்விஷயத்தில் எதிரியாகப் பாவிக்க நியாயமும், காரணமும் இல்லை. கம்யூனிச சித்தாந்தக் கொள்கையை ரஷ்யாவைவிடத் தான் சிறப்பாகவும், யதார்த்த முறையிலும் நடைமுறைப் படுத்துவதாகக் கூறுகிறார் சூ. ரஷ்யா, அமெரிக்காவின் அடி வருடத் தொடங்கிவிட்டது என்ற பிரசாரம் சீன வட்டாரத்தில் பலமாக இருக்கிறதாம்! வியட்நாம் விவகாரத்தில், அமெரிக்கத்தரப்பு விறுவிறுப்படைந்திருக்கிறது. இந்தோனேஷியாவில் சரியானபடி மூக்குடைப் பட்டுவிட்ட நிலையில் இனி தன் வாலாட்டம் அங்கே செல்லாது என்ற நிலைமையும் ஏற்பட்டு விட்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் பின்னணியாக வைத்துக்கொண்டு பார்த்தால், **அமெரிக்காவை அச்சுறுத்தவே** இந்த அணுகுண்டுச் சோதனை என்று தெரிகிறது.

அவசர நிலையை ரத்துச் செய்யக் கூடாது என்பதில் முதலமைச்சர் பக்தவத்சலம் உடும்புப் பிடியாக இருப்பது எதனால்?

பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டு கழகம் ஏன் பயப்படுகிறது என்று கேட்டவரல்லவா, அவர்! அந்தச் சட்டத்தின் துணை இல்லாமல், பொதுத்தேர்தலில் காங்கிரசைக் காப்பாற்ற முடியாது என்ற பயம் காரணமாக இருக்கலாம் அல்லது அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி கழகத்தின் வலுவான எதிர்ப்பை எப்படிச் சமாளிப்பது என்பதற்கு முன் கூட்டியே ஏதாவது திட்டங்களை வகுத்து வைத்துக் கொண்டிருப்பதனாலும் இருக்கலாம்!

1967 பொதுத் தேர்தலைக் கண்டு தி. மு. கழகம் பயப்படுகிறதா?

அப்படிக் கூறி தங்கள் பயத்தை வெளிக் காட்டிக்கொள்பவர்களுக்காகப் பரிதாபப் படுகிறேன்!

'யுனெஸ்கோ' என்ற சொல், இதழ்களில் அடிக்கடி வரக்காண்கிறேன். தயவுசெய்து விளக்குகிறீர்களா?

"யுனைடெட் நேஷன்ஸ் எஜுகேஷனல் சயிண்டிபிக் அண்டு கல்சரல் ஆர்கனிசேஷன்ஸ்" என்ற ஆங்கிலச் சொற்றொடரைச் சுருக்கி 'யுனெஸ்கோ! என்று அழைக்கிறார்கள். அதாவது **ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞானம், மற்றும் பண்பாட்டுக் கழகம்** என்பது பொருள். இதில் இந்தியாவும் அங்கம் வகிக்கிறது. இந்தியக் கல்வி அமைச்சரைத் தலைவராகவும், உறுப்பு நாடுகளில் உள்ள சில வல்லுநர்களை உறுப்பினர்களாகவும்கொண்டு இயங்கும் இந்தியக்கிளை, அவ்வப்போது கூடி, கல்வி விஞ்ஞானம் முதலானவைகள்பற்றிய ஆலோசனைகளைப் பெறுவதுடன், பல நாடுகளுக்கும் கலாசாரத் தூதுக் குழுக்களைப் பரிவர்த்தனையும் செய்துகொள்கிறது. இதன் நோக்கங்கள் பலவென்றாலும் சிறப்பாகக் கூறக் கூடியது இதுதான்.

இந்தியப் பொருளாதாரநிலை எப்படி இருக்கிறது என்கிறீர்கள்?

நான் சொல்லவில்லை ஐயா, ஐ. நா. சபையின் நிபுணர்கள் குழு ஒன்று, "ஆசியாவிலேயே மிகக் கீழான நிலையில் இந்தியப் பொருளாதார வளர்ச்சி இருந்து வருகிறது" என்று கூறியிருக்கிறது. தெரிந்துகொள்ளுங்கள்!!

காஞ்சி

மலர் 2 5—6—66 இதழ் 45

ஆணவம் அழிக்கப்படும்!

"1967 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றுவிட்டால், அடுத்த 20 ஆண்டுகளுக்குக் காங்கிரசை யாரும் அசைக்க முடியாது."

—என்று திருவாய்மலர்ந்தருளி இருப்பவர் இந்தியத் துணைக்கண்டத்தின் இரும்பு மனிதராம் காங்கிரசுத் தலைவர் காமராசர்.

அண்மையில் தமிழகச் சுற்றுப் பயணத்தின் போது காமராசர் கூறி இருக்கிறார் இப்படி. வருகிற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றுவிட்டால், அடுத்து இந்தியத் துணைக்கண்டத்தின் தலைவிதி எப்படி இருக்கும் என்பதை காமராசர் இலை மறைவு, காய் மறைவாகச் சுட்டிக் காட்டுகிறார்.

'வெற்றி பெற்றுவிட்டால்' என்று அவர் குறிப்பிட்டுள்ளதிலிருந்து, **வெற்றி பெற முடியுமா?** என்ற ஐயப்பாட்டை அகத்தடக்கியுள்ளார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

இந்தியத் துணைக் கண்டத்து மொத்த மாநிலங்களில் ஆறுக்கும் மேலான இடங்களில் காங்கிரஸ் தன் பெரும்பான்மையை இழந்துவிடும் இரங்கத்தக்க நிலையிலிருக்கிறது.

இரு கிழமைகளுக்கு முன்னர் பிரதமர் இந்திரா காந்தியுடன் தேர்தல் குறித்துப் பேசிக்கொண்டிருந்த வேளையில், கட்சியும், அரசு அமைப்பும் உடனடியாக மாற்றியமைக்கப் படாவிட்டால், மேற்கு வங்கத்தைக் காங்கிரஸ் இழந்துவிடுவதைத் தவிர்க்க முடியாது என்று காமராசர், பிரதமரின் காதில் போட்டு வைத்திருக்கிறார்.

கேரளாவின் நிலையைப் பற்றி நாம் விளக்கத் தேவையில்லை. மத்தியப் பிரதேசம், உ.பி. ஆகிய மாநிலங்களில் காங்கிரசுக் கட்சிக்கு உள்ளேயே ஏற்பட்டு விட்டுள்ள முடைநாற்றத்தை, எத்தகைய உயர்ந்த பினெயில் கொண்டும் தூய்மைப்படுத்த இயலாமற் போய்விட்ட நிலையில், போட்டிக் காங்கிரசாரின் துரிதமான நடவடிக்கைகளும், அது அனைத்திந்திய ரீதியில், ஒன்று சேர முயலும் முயற்சிகளும், நிச்சயமாக, அந்த மாநிலங்கள், காங்கிரசின் கொடிய கரங்களிலிருந்து நழுவத்தான் போகின்றன என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துகின்றன.

தமிழகத்தின் நிலையைப் பற்றி நாம் ஆருடம் கணிக்கத் தேவையில்லை: நாடெங்கும் மின்னல் வேகச் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்து கண்டறிந்த உண்மையைத்தான் காமராசர் "வெற்றி பெற்றுவிட்டால்"—என்று அறிவிக்கிறார்.

வெற்றி பெற்றுவிட்டால் — என்ற ஐயத்தையும், அதனை யடுத்து "20 ஆண்டுகளுக்கு அசைக்க முடியாது' என்ற அச்சுறுத்தலை யல்ல, **எச்சரிக்கையையும்** விடுக்கும் நிலைக்கு ஆளாக்கிவிட்டிருக்கிறது தமிழகம்.

எஞ்சியுள்ள **பஞ்சாப்** மாநிலம் 'பஞ்சாபிசுபா' வாகவும், 'ஹரியானா'வாகவும் பிளவு படப்போகிறது. இளையவர் முதியவர் என்ற வேறுபாடின்றி உயிர்ப் பலிகளைத் தந்து பெறப் போகிற மாநிலங்கள் அவை.

'பஞ்சாபிசுபா, அமைக்கப்பட்டதும் "முக்கிய பெரியதொழில்களனைத்தையும், நாட்டுடைமையாக்கப் போவதாக, முன் கூட்டியே **சாந்த்பதேசிங்** அறிவித்துள்ளார். இந்த எண்ணம் ஈடேற்றப்பட வேண்டும் என்பதற்காக, அங்கே காங்கிரசு ஆட்சி அமைவதை யாரும் விரும்பமாட்டார்கள். இந்நிலையில் 'பஞ்சாபும் காங்கிரசை விலக்கிவிடக் காத்திருக்கிறது என்பதை காமராசர் தெளிவாக உணர்கிறார்.

எனவேதான் **காங்கிரஸ் வெற்றி பெற்றால்** என்ற ஐயத்தை அவர்எச்சரிக்கை கலந்துவெளிப்படுத்துகிறார்.

காமராசர் எதற்காக 'காங்கிரசை யாரும் இருபது ஆண்டுகளுக்கு அசைக்க முடியாது' என்று எச்சரிக்கை செய்கிறார்? என்று ஆழ்ந்து சிந்திக்கும்போது, காங்கிரசுக் கட்சியிடத்தில், அவர் கொண்டுவிட்ட அருசையைத் துடைத்துக் கொள்வதற்காக, சமயமும் சந்தர்ப்பமும் பார்த்து-காங்கிரசில் தன்னைத்தவிர்த்த பிற மேலிடங்களில் உள்ளவர்களைப் பயமுறுத்துவதற்காகத்தான் இப்படிக் கூறினாரோ?—என்றும் நாம் ஐயுறுகிறோம்.

"காங்கிரஸ் எதிர்ப்புச் சக்திகளே! விழித்தெழுங்கள்!! 1967ல் காங்கிரசை நீங்கள் வெற்றிபெறச் செய்துவிட்டால் **அடுத்த 20 ஆண்டுகளுக்கு அதனை யாரும் அசைக்கமுடியாத அளவுக்குத் தன்னைப் பலப்படுத்திக் கொண்டுவிடும்**; எச்சரிக்கை! எச்சரிக்கை!"

என்று மக்களையும் தட்டிவிட்டுவிட்டு, தன்னைத்தட்டி நடப்பவர்களுக்கும், **'எச்சரிக்கை! காங்கிரஸ் வீழ்ந்து படும்! எச்சரிக்கை!'** — என்று எடுத்துக்காட்டுகிறார் என்றுதான் நாம் பொருள்கொள்கிறோம்.

"1967 தேர்தலில் மீண்டும் காங்கிரசே ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தால், மக்கள் அனைவரும் கடந்த பொதுத் தேர்தல்களில் காங்கிரசையே ஆதரித்திருக்கிறார்கள்; அதனால் மக்கள் விரும்பும் காங்கிரசே இனி ஆட்சிபுரியும்; தேர்தல்கள் தேவையில்லை என்று அரசு முடிவு செய்கிறது! என்று அறிவிப்புக் கொடுத்தாலும் ஆச்சரியப்படத் தேவையில்லை."

என்று நாம் முன்னர் அறிவித்தபடி, 1967ல் காங்கிரஸ் வெற்றி பெற்றுவிட்டால், அடுத்த இருபது ஆண்டுகளுக்கு அதனை யாரும் அசைக்க முடியாத அளவுக்கு—

ஆளுக்கொரு வீடு,
ஆளாளுக்கு நிலம்,
வேலையில்லாதோருக்கு வேலை,
ஏழைகள் இல்லாமை,
இல்லாதார் இல்லாமை,
அனைத்தும் நாட்டுடைமை,
பசியின்மை, பட்டினியின்மை,
பஞ்சமின்மை, பற்றுக்குறையின்மை

எல்லாம் தீர்க்கப்பட்டும், வழங்கப்பட்டும், செய்யப்பட்டும், இந்தியத் துணைக்கண்டமே, பூலோக சுவர்க்கமாக மாறிவிடும்—

அதனால் காங்கிரசை அசைக்க முடியாது

(4-ம் பக்கம் பார்க்க)

உலக அரங்கில்

இக்கட்டுரை எழுதும் வேளையில் அமெரிக்க இராணுவக் காரியதரிசி **மாக் நமரா**வின் அறிக்கையொன்று வந்துள்ளது. "பாகிஸ்தானுக்கு உதவிகள் அளிப்பது என்பது அமெரிக்காவின் சுயநலத்துக்காக—திருப்திக்காக! பாகிஸ்தான் அமெரிக்காவின் கண்களுக்கு சாதாரண பூகோளப் பிரதிபலிப்பு மட்டுமல்ல. 'சீட்டோ' ஒப்பந்த உறுப்பு நாடு; 'நேட்டோ'வின் பொறுப்புள்ள அங்கம். இருக்கும் இடமோ உலக அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த கேந்திரம். சும்மா எடுத்துக் கொடுத்துக் கொண்டே இருக்கவில்லை நம் நாட்டு டாலர்களை" என்றகருத்தில் பாகிஸ்தானுக்கு உதவி அளிப்பதை வெறுக்கும் உள்நாட்டு எதிர்ப்பாளர்களுக்கு வெளிநாட்டு விமர்சகர்களுக்கு அவர் விளக்கம் தந்துள்ளார்.

சீனத்து பாக் விமானங்களையும் அமெரிக்க பாட்டன் டாங்குகளையும் அருகருகே வைத்து பாகிஸ்தான் கராச்சியின் தெருக்களில் சுதந்திர தின ஊர்வலம் விட்டபோதே "அவ்வளவுதான் டாலர் உதவி" "இனி பாகிஸ்தான் மேற்குத் திசைப் பக்கம் திரும்பவே முடியாது" "ஜான்சனைக் கூட, விரும்பினுல் செய்தித் தாள் படங்களில் தான் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்றெல்லாம் கருத்துக்கள் எழுந்தன.

அப்போதும் இதே **மாக்நமரா** "பாகிஸ்தான் சீனுவுடன் கைகோர்த்து நிற்பது அந்நாடு பெறும் அமெரிக்க உதவிக்கு எந்த வகையிலும் தடையாக வராது" என்ருெரு சமாதான விளக்கத்தைத் தந்தார். அதே சமயத்தில் 'செண்டோ' இராணுவ ஒப்பந்தக் கட்டத்தை முடித்துக்கொண்ட நிலையில் வெளிவிவகாரக் காரியதரிசி **டீன்ரஸ்க்** அங்காராவிலிருந்து வெளியிட்ட ஒரு அறிக்கையில் "அமெரிக்காவும் பாகிஸ்தானும் என்றுமில்லாத அளவுக்கு இப்போதுதான் கருத்தில் நெருக்கம் கொண்டிருக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

பாகிஸ்தானின் எந்தவித 'பொல்லாத விளையாட்டும்' அமெரிக்காவை பதட்டப்பட வைக்காது என்பதற்கு உண்மையில் மேலும் ஒரு செய்தி வெளிவந்துள்ளது.

கடந்த பதினெட்டு மாதங்களாகவே—குறிப்பாக இந்தியா பாகிஸ்தான் போர் நிலைமைகளிலிருந்தே—கராச்சிப் பத்திரிகைகளும் ஓரிரு சமயங்களில் அதிபர் அயூப்கானும் அமெரிக்கா தங்கள் நாட்டுக்கு அனுப்பிவைக்கும் தூதுவர்களைப் பற்றி பெரிதும் புகார்கள் கிளப்பி வந்தனர். **எல்ஸ்வொர்த்பங்கர், ஷெர்மன் கூப்பர் கால்பிரெய்த், செஸ்டர் பௌல்ஸ்** போன்ற பெயர் பெற்ற தூதுவர்களை யெல்லாம் புதுடில்லிக்கு அனுப்பிவைக்கும்போது, கராச்சி சாதாரண தூதுவர்களைப் பெறுகிறது என்பது மட்டுமல்ல, பாரபட்சமாக நடக்கும் **வால்டன் கஞேய்** போன்ற இராஜதந்திரிகளைப் பெற்றுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. அதை மறைக்கும் வகையிலும் அதிருப்தியாளர்களைத் திருப்திபடுத்தும் முறையிலும் இப்போது ஜான்சன் **ஈஜின் மர்பிலாக்** என்னும் செல்வாக்குப் பெற்ற அரசியல் குடும்பத்துச் சட்ட நிபுணர் ஒருவரைத் தூதுவராக நியமித்துள்ளார்.

"உங்கள் பிள்ளையை நம்பாதிர்கள்; அவன் உயிருக்கே உலைவைப்பான் என எடுத்துச் சொன்ஞேம்; தந்தை கேட்பதாயில்லை இதோ அவனது பழக்க வழக்கத்தை அப்பன் நேரிலேயே கண்டு கொள்ளட்டும்" என கையும் களவுமாகப் பிடித்துச் சென்ற ஊரார், பையனுக்குக்கிடைக்கப் போகும் தண்டனையை எதிர்பார்த்து நிற்க, தனயனைத் தட்டிக்கொடுத்த தந்தையோ "சபாஷ் மகனே! நீ எப்படியும் பிழைத்துக் கொள்வாய்" என மெச்சிப்பேசியதைக் கேட்டல் போல் அடுத்தடுத்து வெளிப்படும் பாகிஸ்தானின் போக்குகளை, மன மாற்றத்தை, நடவடிக்கைகளைக் கண்டபின் கூடும் **வாஷிங்டன் கராச்சியை இழந்துவிடத் தயாராயில்லை** என்றே ஒரே முடிவைத்தான் உலகம் காண நேரிடுகிறது.

"வலித்தால் என்ன! குட்டியது மோதிர விரலால் அல்லவா! சிறிது நோம் வலி போய்விடும்"என்று சொல்வதைப்போல" பாகிஸ்தான் என்ருல் சும்மாவா! இருக்கும் இடம் எப்பேர்ப்பட்ட இடம் தெரியுமா? நாம் இதுவரை அங்கு செலவழித்த தொகை என்ன தெரியுமா? 20பில்லியன் டாலர்கள். சீனுவுடன் நட்பா? இருந்துவிட்டுப் போகட்டுமே. சீனுவின் விரோதி யார் தெரியுமா? இரஷ்யா! இந்தியாவுடன் மோதுகிறதா? அதெல்லாம் இந்த காஷ்மீருக்காகத்தான். வேறு ஒன்றுமில்லை! ஆசியாவில் அரசியல் சமநிலை பின்னர் எப்படித் தான்ஏற்படும் இதுபோல "உறவு முறை"களெல்லாம் இல்லையென்ருல்?" என்று உள்ளுக்குள் அரசியல் குறுக்கெழுத்துப் போட்டி நடத்துகிறது அமெரிக்கா.

உதைத்தது குழந்தை எனக் கூருது ஒரு மன்னன் அமைச்சரை நோக்கி "உதைத்தகாலை என்ன செய்யலாம்" எனக் கேட்டானும். "வெட்டியெறியுங்கள்" என்ற உரிய பதிலைக் கொடுத்திருக்கிருர் அமைச்சர். "இல்லை! சதங்கை வாங்கி மாட்டப் போகிறேன்" என்ருனும் மன்னன்.

பாகிஸ்தானுக்குப் பாட்டன்டாங்குகள் ஒரு புறமும், மிக் விமானங்கள் மறு புறமும் அணி மணிகளாகப் பூட்டப்படுகின்றன அமெரிக்காவினுலும் சீனுவினுலும்.

ஆனல் பாகிஸ்தான் "குழந்தை"யாக இல்லையே என்ற கவலைதான் உலகத்துக்கு! பூட்டப்படும் "அணி மணி"கள் அழகுக்காக அமையாதே என்ற அச்சம்தான் அண்டை நாடுகளுக்கொல்லாம்!

—எஸ். ஆர்.

3-ம் பக்கத் தொடர்ச்சி

என்று யாரும் முடிவுக்கு வரமுடியாது—வரவும் மாட்டார்கள். கடந்த 19 ஆண்டுக்கால அனுபவமே இதற்குச் சான்று. ஆனல்—

"சர்வாதிகார ஆட்சிக்கு மக்கள் அனுமதியளித்துவிட்டார்கள். ஆகவே, இந்திய நாட்டு ஆட்சி அதிகாரத்தை **'சர்வாதிகார ஆட்சி'** எனப் பிரகடனப்படுத்துகிறோம்."

என்ற அறிவிப்பின் மூலம்தான் '**யாரும் அசைக்க முடியாத** நிலையை உண்டாக்கப்போகிருர்கள் என்றுதான் நம்பவேண்டியிருக்கிறது.

எனவே, தமிழகத்தைப் பொறுத்த அளவில், கழகத் தோழர்களின் பணி தீவிரமடையவேண்டிய வேளை அணுகிக்கொண்டிருக்கிறது.

தோழர்களின் ஒருமித்த செயல்பாட்டுத் திறன் தான், **யாரும் அசைக்க முடியாது** என்ற ஆணவத்திற்கு பதில் சொல்லியாக வேண்டும் என்பதைத் தமிழகம் நம்பிக்கொண்டிருக்கிறது.

ஆகவே, **ஆணவம்** அழிக்கப்படும்-தோழர்களால் அழிக்கப்படும் — நிச்சயம் அழிக்கப்படும் என்பது மட்டும் உறுதி!

✻

"எதுக்காக அகிலாண்டம், அது ஏழை பாவம், அதன்பேரிலே எறிந்து எறிந்து விழறே, எப்பவும் சிடுசிடுன்னு இருக்கறே......?"

"பரிந்து பேச வந்துவிட்டிங்களா அதுக்கு. அது இன்னும் தாவிக்குதிக்க ஆரம்பிக்கும். உங்களுக்கு என்ன தெரியும் அதோட போக்கு. அது நடக்கற நடையும், பார்க்கற பார்வையும் பேசற பேச்சும்......"

"என்ன செய்தா, அதைத்தான் சொல்லேன்......"

"என்ன செய்தாளா? பாருங்க, அவ போட்டுக்கிட்டு இருக்கற கொண்டையை! என்னமோ அள்ளிச் சொருகறதாம், அள்ளி! இந்த அலங்காரமெல்லாம் செய்துகொண்டிருக்கத்தானே அவளுக்கு நேரம் இருக்குது. வேலே செய்ய நேரம் ஏது! வாடி! வள்ளின்னு கூப்பிட்டா வந்தாத்தானே வேகமா!! அன்ன நடை நடக்கரு, அன்ன நடை......"

"வேண்டுமென்ரு அப்படி நடக்கப்போரு! ஒவ்வொருத்தரும் ஒவ்வொருவிதமா நடக்கற பழக்கம். அதுக்காக ஒரு கோபமா......"

"வேளேக்கு ஒரு டப்பா 'மை' கண்ணுக்கு அப்பிக்கொள்றது ......எத்தனேத் தடவை, அந்தக் கூந்தலேத் தள்ளித்தள்ளி விட்டுக் கொள்றது, நான்தான் கேட்கறேன், இப்படியா ஒரு சிங்காரிப்பு...... புடவை தெரியுமேல்லோ நாலு கெஜம்......சும்மா ஒரு சுத்து சுத்திக் கிட்டு வந்துவிடரு, அதுதான் இப்ப நாகரிகம்னு......"

O

நல்லோரின் தீர்ப்பு!

தம்பி! வீட்டுவேலே செய்யும் **வள்ளியிடம்**, எஜமானியம்மாளுக்கு ஏகப்பட்ட கோபம்; அவள் குலுக்கி நடக்கிருள், மினுக்கிக்கொள்கிருள் என்று ஆத்திரம்! குடும்பத்துக்கு ஏற்றவிதமாக நடப்பதில்லே என்று குற்றச்சாட்டு! சிவிச் சிங்காரித்துக்கொள்கிருள், ஒயிலாக நடக்கிருள் என்று கோபம். வள்ளியைக் 'காலா காலத்தில்' கண்டித்து வைக்காவிட்டால், வீட்டு வேலேகளேக் கூட அவள் ஒழுங்காகச் செய்யமாட்டாள் என்றேர் எண்ணம். ஏழ்மை காரணமாக வீட்டு வேலே செய்து குடும்பத்தைக் காப்பாற்றுகிருளே வள்ளி என்பதிலே எஜமானருக்கு அந்தப் பெண்ணிடம் ஒரு மதிப்பு. ஒழுங்கான பெண் என்பதால் அவளிடம் ஒரு பற்றுதல். ஏழையின் மனம் புண்படும்படி நடந்திடக்கூடாது என்ற பெருங்குணம். அதனுல்தான் தன் மனேவியிடம் கேட்கிருர், ஏன் அந்த ஏழைப் பெண்ணிடம் சிடுசிடுவென்று பேசுகிருய்; கோபித்துக்கொள்கிருய் என்று.



வள்ளி மீது அடுக்கடுக்காகக் குற்றம் சாட்டுகிறார்களல்லவா எஜமானியம்மாள் — —அவை உண்மையா!

அழகான புருவம் வள்ளிக்கு! அடர்த்தியானது! இளமை மெருகு பளபளக்கிறது! வேளா வேளைக்கு ‘மை’ அப்பிக்கொள்வதாக எஜமானியம்மாள் சொல்வது, கருகருவென்று இருக்கும் அந்த விற்புருவம் இயற்கை அமைப்பு என்பதை ஏற்றுக்கொள்ள மனமில்லாததால். எஜமானியம்மாள், விவரம் தெரியாமல் பேசுகிறார்கள், பேசட்டும் அதனால் என்ன என்று வள்ளி, “அம்மா! நான் ‘மை’ பூசிப் புருவத்தை அழகுபடுத்திக்கொள்ளவில்லை; இயற்கையாகவே ஒரு எழில் இருக்கிறது என்று விளக்கம் அளிக்கவில்லை. வள்ளி பதில் ஏதும் கூறாததால், தன் குற்றச்சாட்டை அவள் ஒப்புக்கொண்டுவிட்டாள் என்று எஜமானியம்மாள் நம்பிக்கொள்கிறார்கள்.

வள்ளியின் குடிசைக்குப் பக்கத்தில் ஓர் தாமரைக் குளம். பொழுது புலர்ந்ததும் அதிலே போய்க் குளிப்பதிலே அவளுக்கு ஒரு அலாதியான மகிழ்ச்சி. கூந்தல் உலருவதற்காகக் காத்துக்கொண்டிருக்க முடியுமா; ஆயிரத்தெட்டு வேலை இருக்கிறதே எஜமானியம்மாளின் வீட்டில், அதனால் வள்ளி தலையைத் துவட்டிக்கொண்டு, கூந்தலை அப்படியே அள்ளிச் செருகிக் கொள்கிறாள். அடர்த்தியான கூந்தல்! அழகாக அமைகிறது அந்தக் கொண்டை! அலங்காரம் செய்துகொண்டதுபோல இருக்கிறது. எத்தனை வேலைப்பாடுகளைத் துணைகொண்டாலும் எஜமானியம்மாளால் அந்தவிதமான சிங்காரக் கோலம்பெற முடியவில்லை. அந்த எரிச்சலால் ஏசுகிறார்கள், வள்ளி என்னமோ வேண்டுமென்றே, வெகு கஷ்டப்பட்டு அந்தவிதமான கூந்தல் அலங்காரம் செய்துகொண்டிருப்பதாக.

அன்னம்போல நடக்கிறாள் வள்ளி என்றார்கள்! அது அவள் தவறு அல்ல! வாலைப்பருவம்! வடிவழகு! சிற்றிடை! பயிலாமல் வந்த நடை! அதற்கு அவள் என்ன செய்வாள்! எஜமானியம்மாள் நடந்தால் பூமி அதிரும்! கெம்பீரமான நடை என்று புகழ்வோரும் உண்டு! அசைகிறது பார் யானை என்று கேலி செய்வோரும் உண்டு! வள்ளி, இளமங்கை! சின்ன இடை! அன்ன நடை! அவள் தேடிப் பெற்றதுமல்ல; பாடம் படித்ததுமல்ல! அவளுக்கென்று அமைந்துவிட்ட எழில்! அதற்கு அவள் என்ன செய்வாள்.

பதினெட்டு முழுமாகத்தான் அந்தச் சேலை இருந்தது; வள்ளியின் தாயிடம். பிறகு அது நைந்து நைந்து கிழியத் தொடங்கிற்று. பொத்தலும் போனதும் போக மிச்சமுள்ளதை வள்ளி எடுத்துக் கட்டிக் கொண்டாள். அவளுடைய உடலமைப்புக்கு அது போதுமானதாக இருந்தது. அது புதிய நாகரிகம் என்பதற்காக அல்ல! பழைய புடவையின் மிச்சம் அது. புதுப் புதுப் புடவைகள் வாங்க முடியுமா, ஏழையால்.

இந்த விளக்கங்களை யார் கூறமுடியும், கோபம் கொண்டுள்ள எஜமானியம்மாளிடம்.

ஏழ்மை, தன்னை வேறோர் வீட்டிலே வேலை செய்து பிழைக்கச் சொல்லுவதுடன், காரணமற்ற கோபத்துடன் எஜமானியம்மாள் ஏசுவதையும் தாங்கிக் கொள்ளச் சொல்லுகிறது என்று எண்ணிக் கொண்டாள். ஏழை வேறு என்ன செய்ய முடியும். நியாயம், கேட்க முடியுமா!!

❋

“பய, படுக்கவேண்டியதுதான், அடுத்த விநாடி தூக்கம். அது எப்படித்தான் வருதோ! எங்கிருந்துதான் வருதோ! துளியாவது வித்து விசனம் இருந்தாத்தானே. வயிறு நிறையப் போட்டு விடுறாங்க; ஆசாமிக்குத் தூக்கம் தள்ளுது.”

என்று, தன்னோடு சேர்ந்து தூக்கம் வராமல் தவிக்கும் மனையாட்டியிடம் கூறி வருத்தப்பட்டுக் கொள்கிறார் சீமான்.

படுத்துப் படுத்துப் புரளுகிறார், தூக்கம் வர மறுக்கிறது. பட்டு மெத்தை! மின்சார விசிறி! இருந்து? மனதிலே முள்! தைத்தபடி இருக்கிறது. மூதூர் நிலத்தை முடிக்க முடியவில்லையே! பாதூரான் இந்த வருடத்து வட்டிப் பணத்தைக் கட்டாமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறானே! மந்திரி வந்த கூட்டத்திலே மாலை போடும்போது, பயத்தால் உடல் வெட வெடத்ததைப் பார்த்து பக்கிரி கேலியாகச் சிரித்தானே! எத்தனை டானிக் சாப்பிடட்டும், நாலு அடி நடந்தால் மேல்மூச்சு வாங்குகிறதே. பெரிய இடத்திலே பெண்ணைக் கொடுத்ததிலே பெருமைப்பட்டுக் கொண்டிருக்க, மாப்பிள்ளை ‘பேயாட்டமாடி’ பெண்ணைத் துரத்தி அடிக்கிறானே! கொண்டுபோன கணக்கைத் தூக்கித் தூர எறிந்துவிட்டு அதிகாரி நெருப்பைக் கக்கினாரே! ஒரு ரூபாய் டிக்கட்டு ஒன்பதாயிரத்தை வந்தே மாதரம் தலையில் கட்டிவிட்டுக் ‘கிட்டி’ போடுகிறானே!—என்று இப்படிப் பலவிதமான கவலைகள் மனதிலே குடைகின்றன; தூக்கம் வரவில்லை.

அவன்—படுத்ததும் தூங்கிவிட்டானே — வேலையாள்—காலையிலே இருந்து செய்த வேலை உடலைக் கசக்கிப் பிழிந்துவிட்டது பசி விறுவிறுவென்று. சோறும் சாறும் பிசைந்து உள்ளே போட்டதும், பசி அடங்கி, ஒருவிதமான நிம்மதி ஏற்பட்டது.

புளியங்கட்டை, பிளக்க முடியாது, உயிர்போகும் என்று பல பேர் மிரட்டினார்கள். ஆனால் மூன்றே மணி நேரத்தில் பிளந்து போட்டுவிட்டோம்!! எந்தப் பய நம்முடைய வேலையிலே குறை காண முடியும்!—என்று எண்ணுகிறான்; ஒரு பெருமித உணர்ச்சி கொள்ளுகிறான். பிற்பகல் சாப்பிட்ட நெல்லிக்காயின் ‘ருசி’; நான் எங்க மாமனைத்தான் கட்டிக்கப் போறேன் வேளை வந்ததும் என்று காத்தாயி சொன்னதைக் காதாறக் கேட்ட நினைவு, அவனுக்கு ஒரு தெம்பு கொடுத்தது. இந்த இன்ப நினைவு தழுவியதும் நிம்மதியாகத் தூங்கிவிட்டான்.

தன் தூக்கத்தை என்னமோ அவன் பறித்துக் கொண்டதுபோல எண்ணிக்கொண்டு, பதைக்கிறார் சீமான். நியாயமல்ல! ஆனால் அவரிடம் போய் நியாயம் பேச முடியுமா? மூன்று இலட்சம் கொண்ட பெரிய புள்ளி!!

❋

ஏன் அண்ணா! இவர்களை யெல்லாம் என் முன் கொண்டுவந்து நிறுத்துகிறாய். உலகிலே இதுபோலப் பலப் பல; உண்டு என்பதை நானும் அறிவேனே! காரணமற்ற காழ்ப்பு! பொருளற்ற கோபம்! தேவை

ஆகுமா? அடுக்குமா? அனுமதிக்கலாகுமா?

உன் வியர்வைத் துளிகளுக்குள்ள விலை மதிக்கொணாத கணக்கு அவருக்குக் கிடைக்க வில்லை.

கழகம் கருகிவிடவில்லை; கழகம் நடாத்துவோரும் எவர்பின்னும் கைகட்டி வாய்பொத்திச் சென்றிட வில்லை. இது கண்டு ஓரளவு எறிச்சல் ஏற்பட்டது; அப்போதும் எதனால் கழகம் வளருகிறது என்ற கணக்குப் புரியவில்லை.

அப்போதுதான் தம்பி! அரசியல் உலகில், கழக வளர்ச்சி கண்டு அருவெறுப்பு அடைந்தவர்கள் ,கழகம் வளருவதற்கான காரணம் எதையாவது கூறியாக வேண்டும் என்ற நிலைக்குத் துரத்தப்பட்டு, நான்,

அடுக்குமொழி பேசி மயக்குகிறேன் என்றும்,

காமச் சுவையுள்ள கட்டுரைகள் எழுதி கெடுத்துவிடுகிறேன் என்றும்

குற்றம் சாட்டி வந்தனர்.

ஒரு ஐந்தாறு வருடமிருக்கும், தமிழகத்தில் எல்லா அரசியல் கட்சி மேடைகளிலும், இதுதான் பேச்சு!

அடுக்கு மொழி!
ஆபாச நடை!!

தமிழ்மொழியின் அமைப்பே அடுக்கு மொழிக்கு இடம் தருகிறது. அடுக்கு மொழி பேசுவதற்கு முன் வந்தவன் நான் மட்டும் அல்ல! என்றாலும் செய்யக் கூடாத ஒரு பாதகத்தை நான் செய்து வருவது போன்ற ஒரு தோற்றமளிக்கும்படி, எல்லா அரசியல் கட்சியினரும் பேசினர், அடுக்குமொழியைக் கண் டித்து.

முத்தைத் தரு பத்தித் திருநகை
சத்திக் கிரை சத்திச் சரவண
முத்துக்குக வித்துக் குருபர!

என்பனபோன்ற சந்தச் சுவைமிகு எடுத்துக் காட்டுகளை யெல்லாம் நான் பேசி, அடுக்குமொழி என்பது தவறு ஆகாது என்று விளக்கிக் கொண்டுவந்த காலம்.

தம்பி! நீ மறந்துவிட்டிருப்பாய்; நமது கழகத்தின் மீது என்ன பழி சுமத்துவது என்றே அலைந்தவண்ணம் இருந்த அந்த நாட்களில், நாள் தவறாமல் நாம் கூட்டம் நடத்துகிறோமே, அதுவே தவறு, கேலிக் குரியது, கண்டிக்கத்தக்கது என்று பேசினர்! இப்போது நினைவிற்குக் கொண்டு வந்தால்கூட எனக்குச் சிரிப்பு வருகிறது!

பேச்சுக் கச்சேரி நடத்துகிறார்கள்.

உவமையும் அணியும் வைத்துப் பேசுகிறார்கள்.

இது அரசியல் பேச்சாகுமா!!

என்றே எழுதினார்கள்; தொடர்ந்து.

இந்த எதிர்ப்பு கழகத்தை ஏதும் செய்துவிடவில்லை.

சொல்லப்போனால், நான் அடுக்குமொழி பேசுகிறேன் என்று கேலி பேசியவர்களெல்லாம் அடுக்கு மொழி பேசத் தலைப்பட்டனர்.

அடுத்த கட்டத் தாக்குதல் தம்பி! மேலும் விந்தையானது.

அந்த நேரத்தில், நமது கழகத்தில் கலை உலகினரின் தொடர்பு இன்றுள்ள வகையிலும் அளவிலும் இருந்ததில்லை. இன்று ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டிருக்கிற பல சமுதாய திருத்தக் கருத்துக்களை, நாடக மூலம் எடுத்துக் காட்ட வாய்ப்புகள் கிடையாது.

கழகக் கருத்துள்ள நாடகம், சினிமா, பாட்டுக் கச்சேரி, இவை இன்றுள்ளதுபோல இருந்ததில்லை.

ஆனால், நாடக மூலம், இசை மூலம், அடிப்படையான சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துக் கூறியாக வேண்டும் என்ற துடிப்பு, நிரம்ப.

அதன் காரணமாக, நாடகங்கள் நடத்திட முனைந்தோம். உடனே தாவிப் பாய்ந்தனர், இது சரியான வாய்ப்பு என்ற எண்ணத்துடன்,

கூத்தாடுகிறான்!

பவுடர் பூசுகிறான்!!

அரசியல் மேடையை நாடக மேடையாக்குகிறான்!!

அடுக்குமா! ஆகுமா!

அனுமதிக்கப் போமா?

நாடகமாடுபவன் நாட்டிலே அரசியல் கட்சி நடத்துவதா!

கணைகள், சரமாரியாக; மிகக் கூர்மையுடன்!!

ஆனால் தம்பி! அவர்கள்தான் அலுத்துப் போனார்கள்; நமது நாடகப் பணி நின்றுவிடவில்லை; **கே. ஆர். ராமசாமி**யின் ஒப்பற்ற கலைத்தொண்டு நமக்குக் கிடைத்தது; சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினோம்.

இன்று தலைமை நிலையம் இருக்கிறதே 'அறிவகம்' அதுவும், அங்கு நடைபெறும் அச்சகமும் பிறவும், 'பவுடர் பூசிகளாக' இருக்கிறோம் என்று ஏசினார்களே அப்போது பெற்றவை.

கழகத் தோழர்களே நடத்தித் தீரவேண்டியிருந்த நிலையிலிருந்து நமது நாடகப் பணி செம்மையாக வளர்ந்து, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி, டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். ராஜேந்திரன் போன்றாரின் பண்பட்ட நடிப்பின் துணை பெற்றது.

தம்பி கருணாநிதி, சி. பி. சிற்றரசு, ஆகியோரின் நாடகங்கள், கழகத்தின் கலைப்பகுதியாக விளங்கி வந்தன.

தம்பி என்று நான் அழைத்தால் மகிழ்ச்சி பெற்றுக்கொண்டிருந்த நிலையில் சிவாஜி கணேசன், கழக நாடகங்களில் பங்கேற்றதை நாடறியும்.

நாடகமாடுவதால், கழகத்தின் தரம் கெட்டுப் போய்விடும் என்று குற்றம் சாட்டினர். கழகமும் வளர்ந்தது; கலை நிலையும் உயர்ந்தது. இன்று இந்த

இரு துறைகளிலும் மிக்க ஏற்றம் பெற்றுத் திகழ்ந்திடும் எம். ஜி. ராமச்சந்திரன், எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். ராமசாமி, டி. வி. நாராயணசாமி ஆகியோர், நாட்டவரின் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர்.

எதற்காக இதனைக் கூறினேன் என்றால் தம்பி! நாடகமாடுவதையே ஒரு இழுக்கு, இழிவு, அரசியல்வாதி செய்யத்தகாதது; ஆகவே நாடகமாடக் கிளம்பிவிட்டதால் கழகத்தவர் அழிந்துபோய்விடுவர், நாட்டு மக்களுடைய நன்மதிப்பை இழந்துவிடுவர் என்று தவறாகக் கணக்கிட்டுக்கொண்டு, சில ஆண்டுகள் பவுடர் பூசுகிறானே! பாவலா போடுகிறானே!!' என்றே மேடை அதிரப் பேசிக்கொண்டு வந்தனர்.

இத்தகைய எதிர்ப்புப் பிரசாரம் பலன் தராது போகவே, கழகத்தில் தலைமைப் பதவிக்குச் சண்டை! அவனை இவன் விழுங்கப்பார்க்கிறான்; இவனை அவன் ஒழிக்கப்பார்க்கிறான்! தீர்ந்தது! இன்னும் எட்டே நாளில் படாரென உடைபடப்போகிறது என்று பேசி வந்தனர்.

கழகம் குலையாதது மட்டுமல்ல, நேர்த்தியான ஜனநாயக அமைப்பாக வளர்ந்து வரலாயிற்று.

நாடகத்துறையிலே ஈடுபாடுகொண்டதுபோலவே கழகத்தவர், சினிமாத்துறையில் ஈடுபடலாயினர்! இதைக் காரணமாகக்காட்டி, இனி இந்தக் கழகம் அழிந்தேபோகும்! அவன் — அங்கே புரளுகிறான்! இவன் இங்கே உருளுகிறான்!! — என்று ஆபாசமான பழிகளை உமிழ்ந்தனர்.

சினிமாவை விடு!
சிலம்பத்தை எடு!!

என்று நாடெங்கும் முழக்கம் எழுப்பினர்!

இந்தப்படலமும் அவர்களுக்குப் பலன் தரவில்லை.
உடனே வேறோர்முனை பாய்ந்தனர்.

இந்தக் கழகத்தான்கள் பேச்சோடு சரி!
செயலில் முடியாது!!
கிளர்ச்சி நடாத்திட இயலாது!

துணிவும் கிடையாது, திட்டமும் இல்லை; இவர்களை நம்பி கிளர்ச்சியில் ஈடுபட ஆட்களும் வரமாட்டார்கள். இவர்கள் கிளர்ச்சி நடத்தினாலும் சர்க்கார் மதிக்காது என்று ஏசலாயினர்.

அப்போது தம்பி! நான் கூறினது நினைவிலிருக்கும்

கிளர்ச்சிகளைத் தேடி அலையமாட்டோம்.
அவசியம் ஏற்பட்டால் நடத்தாமல் விடமாட்டோம்!

என்றேன். அந்த வாசகத்தைத் தூக்கிவைத்துக் கொண்டு

அலையமாட்டானாம்; அகப்பட்டால் விடமாட்டானாம்

என்று ஊரூருக்கும் பேசி, ஒவ்வொருநாளும் கணக்குப்பார்த்து வந்தனர், இன்று கழகம் எந்த அளவு குலைந்தது என்று! குலையவில்லை.

பிறகு தேர்தலிலே ஈடுபடமுனைந்தோம்.

அகப்பட்டுக்கொண்டான் பயல்! இதுவரையில் சிக்காமல் இருந்துவந்தான்! இனிச் செத்தான்!!— என்று செப்பினர்.

நாட்டுமக்கள் கழகத்தை மேலும் ஏற்றம் பெற்றிடச் செய்தனர்; இவர்களின் ஆருடத்தைப் பொய்யாக்கினர்.

இரண்டாவது முறை தேர்தலில் ஈடுபட்டஉடன், வேறோர் புகார் கிளப்பினர்.

அண்ணாதுரை பார்ப்பன அடிமை ஆகிவிட்டான்.
ஆச்சாரியார் திருவடி சரணம் என்றாகிவிட்டான்.
இனி அவனைத் தமிழர் துரத்திவிடுவர்.

இந்தப் பிரசாரம், மிகத் தீவிரமாக வேலைசெய்யும் என்ற நினைப்பு அதிகம்.

ஆனால் அந்தப் பிரசாரத்திற்குப் பிறகுதான், கழகம் 38-இலட்சம் வாக்குகளைப் பெற்றது!!

ஏமாற்றம்! ஆத்திரம்! எரிச்சல்! அவர்களுக்கு.

ஆகவேதான், தம்பி! உன்னையே ஏசவும், இழித்துரைக்கவும் தலைப்பட்டுள்ளனர்.

இடையிடையே, செத்த பாம்பை எடுத்து ஆட்டிக் காட்டுவதுபோல, ஆச்சாரியாரிடம் சரண் அடைந்துவிட்டான்! ஆரிய தாசனாகிவிட்டான்! என்ற பேச்சையும் எடுத்துவீசி வருகின்றனர்.

சுடச்சுட இருந்த நாளிலேயே விலைபோகாத பண்டம் அது!

இப்போது சூடும்போய், ஈ எறும்பு மொய்த்துக் கொண்டிருக்கும் நிலைக்கு வந்துவிட்டது; இப்போது அதனைக் கூவிக்கூவி விற்றாலும் வாங்குவார், யார்!!

ஆனால் வேறு என்ன செய்வார்கள்!

வள்ளிமீது எஜமானியம்மாளால் கோபிக்காமல் இருக்கமுடிகிறதா?

அயர்ந்து தூங்குகிறானே என்று வேலையாளிடம் சீமானுக்குப் பொறாமை மூளாமல் இருக்கிறதா?

எல்லாவிதமான வசதிகளும், வலிவுகளும் திரட்டி வைத்துக்கொண்டு, தலைவர்கள ஆகத் துடியாய்த்துடிக்கிறார்கள் பலர்; முடியவில்லை. நீயோ தம்பி! உன் தூய தொண்டின்மூலம், வலிவும் பொலிவும்மிக்க கழகத்தை நடத்திச் செல்கிறாய். கோபம் அவர்களுக்கு. கொதிப்பு மிகுதியாக!! அதனால் இழித்தும் பழித்தும் பேசிட முனைகின்றனர். அவர்களின் வேகம் அதிகமாகும், தேர்தல் நெருங்க, நெருங்க!

இழி மொழிகளையும் பழிச்சொற்களையும் கேட்டு, உனக்குக் கோபம் பீறிட்டுக்கொண்டு வரவேண்டும். திசைமாறவேண்டும் என்பது அவாகளின் நோக்கம், தயக்கம், தடுமாற்றம் மூட்டிவிட்டு, தீர்த்துக்கட்டி விடலாம்என்பது அவர்கள கொண்டுள்ள நைப்பாசை.

இவ்வளவுக்கும் காரணம் உன் தூய தொண்டின் அருமையும் பெருமையும் இன்று அரசியல் வட்டாரத்தில், ஓங்கி வளாந்துள்ள தலைவர்களை உறங்கவிடாமல் செய்துகொண்டிருக்கும் ஒரு உன்னதமான பாசறையை அமைத்துக் கொடுத்திருக்கிறதே என்பதனால் ஏற்படும் பொறாமை உணர்ச்சி.

முடிச்சுப்போட்டவர் முக்காடிட்டோடினர்!

இன்று நேற்றல்ல, நமது கழகம் தொடங்கிய நாள் தொட்டு இத்தகையோரின் இழிமொழியும் பழிச் சொல்லும் நம்மீது வீசப்பட்டு வந்தன. ஆனால் அந்தத் தாக்குதல் நமது வளர்ச்சியைத் தடுத்திட இயலவில்லை என்பதை நினைவுபடுத்தவே 'பழங்கதை'யைக் காட்டினேன்!

ஆறு புரண்டோடிவரும் வேகத்தில், கூழாங்கற்களை உருட்டி விட்டுவிடும்.

பெரும் பாறைகள் தடுத்திடினும், அவற்றிலே மோதி பேரிரைச்சலுடன் மேலே தாவும்!

மிகச் சாமான்யர்கள் நாம்! மிகப் பெரிய வலிவினை உருவாக்கி வைத்திருக்கிறோம்.

மிகப் பெரியவர்கள் வலிவு பெறத் தவம் கிடக்கிறார்கள்; பெற்றிட இயலவில்லை.

அதனால் வந்திடும் ஆத்திரத்தில் ஆயிரத்தெட்டு ஏசிடத்தான் தோன்றும்.

✻

அந்த வட்டாரத்திலேயே அவன் பெரிய மிட்டாதாரன்! தலம் பல சென்று தொழுது, வரம் பெற்று பெற்றான் ஒரு மகனை! ஆனால் அவனோ......

பொட்டல் காட்டினைப் பண்படுத்தி பூந்தோட்டமாக்கினான் ஓர் காளை.

ஓர் நாள் ஆற்றோரம் மிட்டாதாரன் மகன் உலவச் சென்றான். திடீரெனக் கீழே சாய்ந்தான்! காக்காய் வலிப்பால் தாக்குண்டதால்!

கண்டான் காளை! கடுகிச் சென்று, மிட்டாதாரன் மகன் முகத்தில் நீர் தெளித்து, நினைவு வரச் செய்து, அவனை அழைத்துச் சென்றான் மாளிகைக்கு!

மிட்டாதாரன் நன்றி கூறத்தானேவேண்டும்? எறிந்து விழுகிறான், காளையின் மீது!

பார்! இந்தப் பயலை. கொழுத்துக் கிடக்கிறான்!

இத்தனைக்கும் இராப்பட்டினி!

என்மகன்—குலக் கொழுந்து—இப்படி இருக்கிறான்!!

என்று எண்ணுகிறான்; கடுங்கோபம் வருகிறது.

✻

தம்பி! கதைதான்; ஆனால் இத்தகைய இயல்பு கொண்டோர் இருந்திடும் இடத்திலேதான், நீயும் நானும் இருந்து வருகிறோம். ஏசுகிறார்களே ஏன் என்று வியப்படையவா வேண்டும்; விளக்கம் பெற்றிடவேண்டும்; நம் வெற்றி அவர்களுக்கு வேதனையைத் தருகிறது; அதனால், பாவம் எறிச்சல் மிகுந்த நிலையில், எதையெதையோ கதைக்கிறார்கள்.

அவர்களுக்குத் தெரிந்ததை அவர்கள் செய்து கொண்டிருக்கட்டும்; நாம் நமது இயல்புக்கு ஏற்றனவற்றினைச் செய்தபடி இருப்போம். நல்லோரின் தீர்ப்பு நம் பக்கம்தான் இருந்திடும்!

அண்ணன்,

அண்ணாதுரை

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்

சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.

(Recognised by Central Board of Indigenous Madicine Madras)

பொதுமக்கள் ஏமாற்றமடையாதிருக்க, எங்களது மருந்துகளை வாங்கும் போது, ஜெயா பார்மஸி H. O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையையும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr. நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
2 வள்ளிமால் தெரு (சிங்காரத்தோப்பு எதிர்) பெரியகடைவீதி, திருச்சி-8.
28 நெத்திமேடு C பேப்புதூர் ரோடு, சேலம்-2
208 ஒப்பணக்கார வீதி கோயம்புத்தூ
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47A கன்னம்மாள் கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.
மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலையத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: J. M. ராஜன், ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.
போன்: 348, 348-A, 438.

2—3

கௌதமர் தண்டனை!

“இவர்கள் யார்? எதற்காக இப்படிக் கத்துகிறார்கள்? மாறு வேடத்தில் எதிரி வந்து சிக்கிக்கொண்டான் என்ற ஆத்திரமும் ஆனந்தமும் கலந்த குரலொலியா இது?” என்ற அச்சத்தோடு, குலசேகரனும் அஞ்சலையும் கண் மிரள கைகால்கள் சில்லிட நின்றிருந்தனர்.

சில நொடிகளில் அவர்களுக்கு அருகே இருந்த செடிகளைத் தள்ளிக்கொண்டு, பத்துப் பதினைந்து இளம் பெண்கள் ஓடிவந்தனர்.

குலசேகரனையும் அஞ்சலையையும் பார்த்ததும், ஆச்சரியம் கொண்டவர்களாக அப்பெண்கள் ஒரு கணம் அசைவற்று நின்றுவிட்டனர்.

“இந்தப் பெண்களின் குரலொலியைக் கேட்டுத்தான் குலைநடுக்கம் கொண்டோமா? குற்றமுள்ள நெஞ்சு என்றால், ஆண் பெண் குரல் வித்தியாசம் கூடத் தெரியாமல் போய்விட வேண்டுமா?” என்றெண்ணி குலசேகரன் வெட்கமும் வேதனையும் அடைந்தான்.

“இளவரசி எங்கே?” என்று கேட்டபடி, அப்பெண்களிலே புள்ளிச் சேலை அணிந்த ஒருத்தி, அஞ்சலையின் அருகே வந்தாள்.

“இளவரசியா? எந்த நாட்டு இளவரசி? நாங்கள் பார்க்கவில்லையே?” என்று ஒன்றும் அறியாதவளைப் போல அஞ்சலை கூறிவிட்டு, பக்கத்திலிருந்த பன்னீர் மலர் ஒன்றைப் பறித்தாள்.

திருமேனி நுழைந்த புதரின் பக்கமாகக் குலசேகரன் திரும்பிப் பார்த்தான்.

புதருக்குள் இருந்தபடியே மிரள மிரள அந்த மான் விழியாள் பார்த்துக்கொண்டிருந்தது, அவனுக்குத் தெரிந்தது.

“அங்கே என்ன அப்படிப் பார்க்கிறீர்?” என்று கேட்டபடி, புள்ளிச் சேலைக்காரி தன் பார்வையை அத்திசையில் திருப்பினாள்.

“இதோ இளவரசி! இதோ!” என்று கத்திக்கொண்டே அப்பெண் புதரை நோக்கி ஓடினாள். மற்ற பெண்களும் அவளைத் தொடர்ந்து ஓடினர்.

“எங்கெங்கு உங்களைத் தேடுவது? வாங்கம்மா வெளியில்?” என்று கையைப் பிடித்து இளவரசியை வெளியே இழுத்து வந்தாள், அந்தப் புள்ளிச் சேலைக்காரி.

“வெண்ணிலா! என்னை விடடி! என்னை விடடி!” என்று புள்ளிச் சேலைக்காரியான வெண்ணிலா என்ற தோழியின் தலைமயிரைப் பிடித்து இழுத்தாள் திருமேனி.

“அதெல்லாம் முடியாது! இனிமேல் உங்களை விடவே முடியாது! விட்டால், எந்தக் குகையோ, எந்தப் புதரோ-யாரால் கண்டுபிடிக்க முடியும்? இந்தக் காட்டிலும் குன்றிலும் சுற்றித் தேட எங்கள் கால்கள் என்ன மரத்தால் அடிக்கப்பட்டவையா?” என்று வெண்ணிலா சொல்லி, திருமேனியின் கையைப் பிடித்து இழுத்தாள்.

“என்னை விடடி, இனிமேல் எங்கும் ஓடமாட்டேன்!”

“அதெல்லாம் முடியாது! அந்தி சாய்ந்துவிட்டது, அரசர் எங்களைத்தான் கோபிப்பார்! நேராக மாளிகைக்குச் செல்ல வேண்டும்!”

தோழியின் பிடியிலிருந்து தப்பியோட திருமேனி திமிறியபோது, வெண்ணிலாவிற்கு உதவியாக மற்றத் தோழிகளும் இளவரசியைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய், குலசேகரன் எதிரே நிறுத்தினர்.

“பூஞ்சோலை! இப்படிப் பார்! இந்தத் தோழிகள் என்னைக் கொல்லப் பார்க்கிறார்கள்! இவர்களிடமிருந்து நீயாவது என்னைக் காப்பாற்றேன்!” என்று திருமேனி திமிறிக்கொண்டே கூறினாள்.

அதைக் கேட்டு, குலசேகரனும் அஞ்சலையும் சிரித்தனர்.

“இந்தத் தோழிகளின் முட்டாள்தனத்தைப் பார்த்துதானே சிரிக்கிறீர்கள்! சிரியுங்கள், சிரியுங்கள்! நன்றாகச் சிரியுங்கள்! அப்பொழுதுகூட இந்த மாட்டுப் பிறவிகளுக்குப் புத்தி வராது!...பாரடி, வெண்ணிலா! இவரும் இவளும் உங்கள் கபோதித்தனத்திற்காகக் கைகொட்டிச் சிரிப்பதை! நான் சொல்லுவதைக் கேளுங்கள்! என்னை விட்டு விடுங்கள்! பிறகு இவர்கள் சிரிக்கிறார்களா பாருங்கள்! அதன் பிறகும் இவர்கள் சிரித்தால், அப்பாவிடம் சொல்லி சிரச்சேதம் செய்துவிடச் சொல்கிறேன்!” என்று திருமேனி சொன்னதும், குலசேகரனும் அஞ்சலையும் மட்டுமல்ல தோழிகளும் கூடச் சிரித்துவிட்டனர்.

“இளவரசியை விடுங்கள்—எங்கும் இனிமேல் போகமாட்டாள்!” என்று குலசேகரன் சொன்னதும், ‘அது சரி’ நீங்கள் யார்?’ என்று வெண்ணிலா கேட்டாள்.

“நாங்களா...” என்று குலசேகரன் சொல்ல ஆரம்பித்ததும், திருமேனி இடைமறித்து ‘வெண்ணிலா, நான் சொல்கிறேன்! அவர்கள் சுயநினைவு இல்லாமல் இருக்கிறார்கள்! எதையாவது உளறுவார்கள்! அதிலே கொஞ்சம்கூட உண்மையே இருக்காது!” என்று சொல்லியபடி, தோழிகளை உதறித் தள்ளிவிட்டு குலசேகரனின் அருகே வந்து நின்றாள்.

“வெண்ணிலா! இவரும் இவளும் காதலர்கள்! மாலை நேரத்தை இன்பமாகக் கழிக்க, இந்தக் காட்டிற்கு வந்திருக்கிறார்கள். திருமணமாகும் வரைக்கும் இவர்கள் காட்டிலேயே இருக்கப் போகிறார்களாம்! அதன் பிறகுதான், ஊருக்குத் திரும்பிச் சென்று, குழந்தை குட்டிகளைப்

பெற்றுக்கொண்டு, குடியும் குடித்தனமுமாய் வாழப்போகிறார்களாம்! இப்பொழுது இவர்கள் காதல் போதை தலைக்கேறிச் சுயநினைவே இல்லாமலிருக்கிறார்கள்! நாம் நிற்பதும், அவர்களுக்குத் தெரியாது! நாம் பேசுவதும், அவர்களுக்குக் கேட்காது! இவள் இருக்கிறாளே, பெரிய கைகாரி! இவரை அப்படியே பெட்டிப் பாம்பாக்கிக் காட்டிற்குத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டாள்!'' என்று திருமேனி, அஞ்சலையின் முதுகில் தட்டிக் கொடுத்தாள்.

"இவர் என் காதலர் அல்ல!''

"பிறகு? உன் காதலர் இல்லை என்றால், இவரது காதலியா நீ!''

"இல்லை!''

"சுத்தப் பொய்! அஞ்சலை நீ சொல்வது, சுத்த பொய்; இரண்டில் ஏதாவது ஒன்று, நிச்சயமாக இருந்தாக வேண்டும்! இரவா? இல்லை! பகலா? இல்லை! இப்படிச் சொன்னால் கேட்போர் சிரிக்கமாட்டார்களா! ஒன்று இரவாகவாவது இருக்கவேண்டும், அல்லது பகலாகவாவது இருக்கவேண்டும்! இரண்டும் இல்லை என்றால் உனக்குப் பைத்தியம் என்றுதானே அர்த்தம்! இதைப் போன்றதுதானே, இவர் உன் காதலரா அல்லது நீ இவர் காதலியா என்ற கேள்வியும்? இரண்டும் இல்லை என்கிறாயே— இதைக் கேட்போர் உனக்குப் பைத்தியம் என்றல்லவா, தீர்மானித்துவிடுவார்கள்?''

"இவர் என் அண்ணா!''

"அண்ணா! இவர் உன் அண்ணா! நீ, இவர் தங்கை ஓகோ மறந்தே போனேனே — அப்படியும் ஒரு உறவு இருக்கிறது அல்லவா!'' என்று திருமேனி சொல்லிக்கொண்டே அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"இவர்கள் யாராக இருந்தால் நமக்கென்ன! உங்களைக் காணாமல், அங்கே மாளிகையில் அரசர் மனக் கவலையோடு இருப்பார்! வாருங்கள் அம்மா, போகலாம்!''

"வெண்ணிலா, கொஞ்சம் இரு! இவர்கள் இருவருமாகச் சேர்ந்து என்னை ஏமாற்றப் பார்க்கிறார்கள்! அதுதான் திருமேனியிடம் நடக்காது! இந்தத் திருமேனியை ஏமாற்ற யாராலும் முடியாது! யாரிடத்திலும் இந்தத் திருமேனி ஏமாறவும் மாட்டாள்! இவர் யார் என்பது எனக்குத் தெரியும்! மற்றவர்கள் எல்லாம் முட்டாள்கள், தாம் மட்டுமே அறிவாளி என்ற நினைப்பில், இவர் மாறுவேடத்தில் வந்திருக்கிறார்! அப்பாவிடம் ஒரு வார்த்தை—ஒரே ஒரு வார்த்தை— சொன்னால் போதும்! அவரே எழுந்து ஓடிவந்து, இவரை ஒரே குத்தாகக்குத்திக்கொன்றுவிடுவார்! ஆமாம், இதோபார் இவர் விழிப்பதை; இதிலிருந்தே தெரிந்துகொள்–நான் சொல்லியவை அவ்வளவும் உண்மை என்று! ஓடப் பார்க்கிறார்! விடாதீர்கள்! எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கையோடு இருங்கள்! அப்பாவிடம் சொல்லி, உங்களுக்கு ஏராளமான பரிசுகள் தரச் சொல்கிறேன்!''

"ஆல மரத்தின் மீதிருந்து பார்த்ததையும் கேட்டதையும் இந்தப் பைத்தியம் சொல்லிவிடும் போலிருக்கிறதே!'' என்று திடுக்கிட்டவர்களாய் குலசேகரனும் அஞ்சலையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"இதோ விழிக்கிறார் பாருங்கள்! இந்தப் பார்வையே சொல்கிறது, இவர்தாம், இந்திரன் என்று!''

இவ்வாறு திருமேனி சொன்னதைக் கேட்ட பிறகுதான், குலசேகரனுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. அச்சம் கப்பியிருந்த அவன் முகத்தில், மெள்ளப் புன்னகை தோன்றியது.

"எந்த இந்திரன்?'' என்று வெண்ணிலா ஏறிட்டுப் பார்த்தாள்

"இந்திரலோகத்திற்கு அதிபதி இந்திரன் என்று நீ கேள்விப்பட்டது இல்லையா — அவர்தாண்டி இவர்! ஏண்டி என்னை இப்படிப் பார்க்கிறாய்! நீ சுத்த மக்கு! சுத்த மக்கு!

"நேரமாகிறது அம்மா, நாம் போகலாம்''

"இவரை இங்கே தனியே விட்டுவிட்டுப் போய்விடலாம் என்கிறாயா? முடியாதடி முடியாது! இவரைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய், அப்பா எதிரில் நிற்க வைத்துத் தண்டனை வாங்கித் தர வேண்டும்!''

"இவர் என்னென்ன அக்கிரமம் செய்திருக்கிறார் தெரியுமா? உருக்குமாங்கதன் உருக்கொண்டு முகந்தையிடத்திலும், அசுவமேதயாகத்தில் இறந்த குதிரையின் உடலில் புகுந்துகொண்டு பாரிஷதன் எனும் மன்னனின் மனைவியிடத்திலும் இவர் ஆடிய ஆட்டங்கள் இருக்கின்றனவே—நான் சொன்னால் நீ இப்பொழுதே இவர் கழுத்தைப்பிடித்து நெரித்துக் கொன்றுவிடுவாய்! அவ்வளவு மோசம்! அவ்வளவு மோசம்! பெண்கள் அழகாக இருந்தால் மட்டுமல்ல. மிருகங்கள் அழகாக இருந்துவிட்டால், இந்த மகான் சும்மாவிட்டுவிடமாட்டார்!''

"போதும்! நேரமாகிறது!''

"நீ போதும் என்றால் நான் நிறுத்திக்கொள்ளவேண்டுமா? முடியாது! கேளடி! இவர் செய்த அக்கிரமத்தை! இருக்ஷவிரசன் என்றொரு குரங்கு! அந்தக் குரங்கின் கண்களிலிருந்து சிந்திய ஒரு துளி கண்ணீர், ஓர் ஆண் குரங்காயிற்று! பார்வதி குளித்த குளத்தில் அந்த ஆண்குரங்கு குளித்ததும், உடனே அழகான பெண்குரங்காக அது மாறிவிட்டது! கேட்டாயடி, பார்வதி தேவி குளித்த குளத்திற்கு அவ்வளவு சக்தியிருந்திருக்கிறது! அந்தப் பெண் குரங்கின் அழகு, இந்த ஆணழகரின் மனதிலே புயலை உண்டாக்கிவிட்டதாம்! குரங்காயிற்றே அதனிடமா சேட்டை செய்வது, பார்த்தால் யாராவது கைகொட்டிச் சிரிப்பார்களே என்ற நினைப்பே இல்லாமல் — பாய்ந்தாராம் அந்தக் குரங்கின்மீது! அது கிரீச்கிரீச் என்று கத்திக்கொண்டே ஓடிற்றாம்! இவரா விடுவார், துரத்தினாராம்! மரத்தின்மீது ஏறிற்றாம்! கிளைக்குக் கிளை தாவிற்றாம்! இவரும் அப்படியே தாவி எப்படியோ அந்தக் குரங்கைப் பிடித்துவிட்டாராம்! அந்தக் குரங்கிற்கும் அவருக்கும் பிறந்த குழந்தைதான் வாலியாம்!''

"கேட்கும்போதே காதை மூடிக்கொள்ளலாமே என்று தோன்றுகிறதே!''

"அப்படிக் காதை மூடிக்கொண்டால் என்ன நேரிடும் தெரியுமா? ஈயத்தை நன்றாகக் காய்ச்சி உன் காதில் ஊற்றிவிடுவார்கள்! கௌதமர் தண்டனை கொடுத்தாரே ஒழுங்காகக் கொடுக்கத் தெரிந்ததா அவருக்கு?''

"காமுகனுக்கு ஏற்ற நல்ல தண்டனையாகத்தான் கொடுத்திருக்கிறார்!''

"அதுவாடி நல்ல தண்டனை? என்ன சாபம் தந்திருக்க வேண்டும் தெரியுமா?''

"சொல்லுங்கள் அம்மா அடுத்த முறை இவர் ஆசிரமத்தின் பக்கம் சென்றால் அந்தத் தண்டனையைத் தரச் செய்கிறேன்!''

"பார்வதி குளித்த குளத்தில் இவர் குளித்து எழவேண்டும்

என்று சாபம் தந்திருக்கவேண்டும் கௌதமர்! அப்படித் தந்திருந்தால் இவர் இந்திரலோகத்திற்குத் திரும்பிப்போய் இருப்பாரா? போய் இருந்தாலும் அங்கே உள்ள தேவர்கள் இவரைச் சும்மா விட்டிருப்பார்களா?''

"இவர் யாரையோ எதுவோ செய்துவிட்டுப் போனுல் — அதைக் குறித்து எல்லாம் பேசி நாம் ஏன் ஆத்திரமடையவேண்டும்?''

"என்னைக்கூட சும்மா விடவில்லையடி இவர்!''

"உங்களைக் கூடவா?''

'கேளடி அந்தக் கதையை! ஒரு சமயம் நான் இந்திரலோகத்திற்குப் போயிருந்தேன்! அப்பொழுது இவர் என்னைப் பார்த்துப் பல்லைக் காட்டினுர்! சீ என்று சொல்வதைப் போல நான் முகத்தைச் சுளித்துக் கொண்டுபோக அடியெடுத்து வைத்தேன்! இலங்கை அரசனின் மகள் நான் என்று தெரிந்து கொள்ளாமல் ஆசிரமத்திலோ, ஆற்றங்கரையிலோ இருப்பாள் என்று எண்ணிக் கொண்டு கண்ணே!' என்ற வார்த்தையோடு பக்கத்தில் வந்தார்! யாரையா நீர்? என்ன துணிவையா உமக்கு என்னை கண்ணே என்று அழைக்க?' என்று ஆத்திரத்தோடு நான் கேட்டேன்! 'இந்த லோகத்தின் அதிபதி இந்திரன் நான்தான் பெண்ணே! திரிலோகங்களிலும் சுற்றியிருக்கிறேன், திருமேனி, உன்னைப் போன்ற அழகியை நான் கண்டதில்லை! இலங்கைக் கிளியே இன்னமும் ஏன் பயம்? வா! அருகே வா!' என்று புன்னகையோடு சொல்லிக்கொண்டே என் அருகே நெருங்கினுர்! அய்யோ இவர் தானு இந்திரர்! தெரியாமல் கண்ணில்பட்டுவிட்டோமே! என்னசெய்வது? எப்படித் தப்புவது? என்று பயந்து, உடனே கிளியாகஉருமாறி வானத்திலே பறக்க ஆரம்பித்தேன்! தப்பினேம், இனி பயமில்லை என்ற மகிழ்ச்சியோடு திரும்பிப் பார்த்தபோது, இவர் ஆண் கிளியாக என்னைத் துரத்திக்கொண்டு வருவதை அறிந்ததும், திடுக்கிட்டுத் தொப்பென்று கீழே விழுந்துவிட்டேன்! விழுந்ததும் விழுந்துவிட்டோம் செத்துவிட்டதாக நடிப்போம் என்று பேச்சையும் மூச்சையும் அடக்கிக்கொண்டு, ஆடாமல் அசையாமலிருந்தேன்! அப்பொழுதாகிலும் இவர் என்னைச் சும்மா விட்டார் என்று நினைக்கிருயா? என்னைப் புரட்டிப் பார்த்தார்! எனக்கு ஒரே பயமாகிவிட்டது! உடனே பாம்பாக மாறி, பக்கத்திலிருந்த புதருக்குள் புகுந்துகொண்டேன்! இவரும் பாம்பாகி, அந்தப் புதருக்குள்ளேயே நுழைந்தார்! அதன் பிறகு நான் எறும்பு யானை புலி மான்—இப்படி ஏதேதோ உருவங்களை எல்லாம் எடுத்தேன்! எந்த உருவம் எடுத்தாலும், இந்த மனிதர் என்னை விடுவதாகத் தெரியவில்லை! கடைசியாக ஒரு கல்லாக மாறி, இந்த ஆலமரத்தின் அடியில் வந்து விழுந்தேன்! பாவம் இவரால் கல்லாக மாற முடியவில்லை. ஆகவே இந்திரலோகத்திலேயே இருந்துவிட்டார்.''

'இவரா உங்களைத் துரத்தினுர்?'

"ஆமாம்!''

"அப்படியானுல் உடனே புறப்படுங்கள், இளவரசியாரே! அரசரிடம் சொல்லி உடனே ஆட்களை அழைத்துக்கொண்டு வந்து, இவரைக் கைது செய்து சிறையில் அடைத்துவிடலாம்?''

"சிறையில் அடைப்பதா— கூடாதடி!''

"வேறு என்ன செய்யவேண்டும் என்கிறீர்?''

"கௌதமர் தந்த தண்டனை சரியல்ல என்றேன் அல்லவா?''

"ஆமாம்!''

"ஆகவே இவரை இழுத்துச் சென்று பார்வதி குளித்த குளத்தில் குளிக்கச் செய்யவேண்டும்!''

"அதுதான் சரியான யோசனை! புறப்படுங்கள் இளவர்சியாரே! அரசரிடம் சொல்லி, ஆட்களை அழைத்துவரலாம்!''

"ஏண்டி, நாம் இவ்வளவு பேர் இருக்கிருேமே — இவரைக் கட்டி இழுத்துக்கொண்டு போக முடியாதா?''

"கூடாது அம்மா!''

"ஏண்டி?''

"நாமோ பெண்கள்! இவரோ இந்திரர்! தொடலாமா? பார்த்தாலே ஆபத்து என்ருல், தொட்டால் அதைவிட எவ்வளவு பெரிய ஆபத்து நேரிடுமோ? வேண்டாம் அம்மா, வாருங்கள் போய் அரசரிடம் சொல்லலாம்!''

"ஆமாம், அதுதான் சரி'' என்று சொல்லிப் புறப்பட்ட திருமேனி, உடனே திரும்பி வந்து, "அஞ்சலை, உண்மையில் இவர் உன் அண்ணுதானு?'' என்று கேட்டாள்.

"ஆமாம், என் அண்ணுதான் இவர்! இதிலென்ன தங்களுக்குச் சந்தேகம்?'' என்று அஞ்சலை கேட்டாள்.

'நம்மிருவரையும் பார்த்தால் ஒரே முகச்சாயலாக இருக்கிறதே என்ற சந்தேகத்தினுல்தான், அப்படிக் கேட்கிருள்!'' என்று சிரித்துக்கொண்டே குலசேகரன் சொன்னுன்.

"அந்தச் சந்தேகம், நீர் சொன்ன பிறகுதான் உண்டாகிறது!''

"முதலில் உண்டான சந்தேகம் என்ன?''

"அடஅட, அது மறந்து போய் விட்டதே!''

"ஏனம்மா இவரோடு தாங்கள் பேசுகிறீர்கள்! அரசர் வஞ்சிமா நகருக்குப் போகவேண்டும் என்ருர் — வேகமாக வாருங்கள் அம்மா — போய்விடப் போகிருர்! பிறகு இவரை நாம் பிடிக்கவேமுடியாது!' என்று வெண்ணிலா சொல்லி, இளவரசி திருமேனியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்ருள்,

திருமேனியும் தோழிகளும் பார்வையிலிருந்து மறைந்ததும், 'பைத்தியம்! சுத்தப் பைத்தியம்!' என்று சொல்லி அஞ்சலை வாய்விட்டுச் சிரித்தாள்.

"அஞ்சலை! அஞ்சலை!'' என்று யாரோ சிறிது தூரத்தில் அழைப்பதைக் கேட்டதும், அவள் திரும்பிப்பார்த்தாள்.

"ஆ! அவர் கண்ணில் பட்டுவிட்டோமே!'' என்று அலறிக்கொண்டே, குலசேகரனின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்!

[வளரும்]

விற்பனையாளர்களுக்கு

"காஞ்சி'' விற்பனையாளர்கள் அனைவருக்கும் மே மாத பில் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியல் தொகை தவருமல் அனுப்பவேண்டுவதுடன், பாக்கியுள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்பக் கோருகிருேம். மிகுந்த பாக்கியுள்ளவர்களுக்கு நிச்சயம் இதழ்கள் நிறுத்தப்படும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிருேம்.

உரிமையாளர்
"காஞ்சி''

சின்ன காஞ்சபுரம் 86, திருக்கச்சிநமபி தெரு, அல்லி அச்சகத்தில, உரிமையாளர் சி. என. ஏ. இளங்காவனுல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என. அணணுதுரை.